**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நீலகிரி மாவட்ட வருவாய் அலகு – திரு.மா.ராஜ்குமார், த/பெ, காலஞ்சென்ற திரு.ஜி.மாதன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, பணி 9(2) பிரிவு**

அரசாணை (3டி) எண். 126

நாள் 19.07.2023
சோபகிருது வருடம், ஆடி– 03,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.3/43912/2020, நாள் 21.05.2022.

***********

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், நீலகிரி மாவட்டம், காவல் துறையில் பணியாற்றி பணியிடையே 14.02.2012 அன்று காலஞ்சென்ற திரு ஜி.மாதன், என்பவரின் மனைவி திருமதி.சரஸ்வதி என்பவர் தனது மகன் திரு.மா.ராஜ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 25.05.2012 அன்று மனு அளித்துள்ளதாகவும், தனியர் திரு.மா.ராஜ்குமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 25.05.2012 அன்று மனு அளித்துள்ளதாகவும், இம்மனுக்கள் மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் பெறப்பட்டுள்ளது என்றும், மனு அளிக்கப்பட்ட (25.05.2012) தேதியில் தனியர் 17 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், மனுதாரருக்கு 18 வயது பூர்த்தியான பிறகு மனு அளிக்க அறிவுறுத்தியதின் பேரில், தனியர் தனக்கு 18 வயது பூர்த்தி அடைந்த பிறகு 20.05.2013 அன்று மீண்டும் மனு அளித்ததாகவும், அரசுப் பணியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட நாளில் தனியர் 24 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், விண்ணப்பம் அளிக்கப்பட்ட நாளில் உரிய கல்வித்

//த.பி.பா//

தகுதியான 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் (மார்ச்–2010) என்றும், விண்ணப்பம் அளித்த நாளில் தனியர் குறைந்தபட்ச வயதினைப் பூர்த்தி செய்யாததால், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ல் பிரிவு–20(6)(b)–ஐ தளர்வு செய்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யக்கோரும் நீலகிரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை ஏற்று, தனியர் திரு.மா.ராஜ்குமார் என்பவர் பொருட்டு, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ல் பிரிவு–20(6)(b)–ஐ தளர்வு செய்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் தனியர் பணியேற்ற நாளான 05.12.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசாணை பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் காவல்துறையில் பணியாற்றி பணியிடையே 14.02.2012 அன்று காலஞ்சென்ற திரு.ஜி.மாதன் என்பவரின் மகன் திரு.மா.ராஜ்குமார் என்பவர் விண்ணப்பம் அளித்த நாளில் குறும வயது தகுதியான 18 வயதினைப் பூர்த்தி செய்யாததால், தனியர் பொருட்டு, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ள வயது வரம்பிலிருந்து விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b) மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து தனியர் திரு.மா.ராஜ்குமார் என்பவர் பணியேற்ற நாளான 05.12.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 3029/க்யூ.2/2023–1, நாள் 25.05.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண். 3142/ஜி–2/2023–1, நாள் 21.06.2023–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5.

//த.பி.பா//

மாவட்ட ஆட்சியர், நீலகிரி.

திரு.மா.ராஜ்குமார், இளநிலை உதவியாளர்,
(மாவட்ட ஆட்சியர், நீலகிரி மூலமாக)

**நகல்**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

19/7/2023
பிரிவு அலுவலர்.

19.7.23